सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

**असाधारण**

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

**प्रधिकार प्राकाशित**

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

नई दिल्ली, सोमवार, 23 नवंबर, 1992/1914 शक

New Delhi, Monday, 23rd November 1992

*புது தில்லி, 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் தேதி, திங்கட்கிழமை*


## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 23rd November 1992

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 23, நவம்பர் 1992*

The translation in Tamil of the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 (33 of 1989), The All-India Services Act, 1951 (61 of 1951), The Dowri Prohibition Act, 1961 (28 of 1961), The explosive Substances Act, 1908 (6 of 1908), The President (Discharge of Functions) Act, 1969 (16 of 1969), The Government Savings Certificates Act, 1959 (46 of 1959), The Weekly Holidays Act, 1942 (18 of 1942) and The Hindu Adoptions and Maintenance Act, 1956 (78 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (33/1989), அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 (61/1951), மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 (28/1961), வெடிபொருள்கள் சட்டம், 1908 (6/1908), குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 (16/1969), அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் சட்டம், 1959 (46/1959), வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 (18/1942) மற்றும் இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956 (78/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)—வின் கீழ் இவையே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

# அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951.

(சட்ட எண் 61/1951)

[1951, அக்டோபர் 29]

ஒன்றியத்திற்கும், மாநிலங்களுக்கும், பொதுவான அனைத்திந்தியப் பணிகளுக்கு ஆளெடுப்பதையும், அவற்றில் அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக் கட்டுகளையும் முறைப்படுத்துவதற்கான சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 என்று வழங்கப்பெறும்.

பொருள்வரையறை

2. இந்தச் சட்டத்தில் ''ஓர் அனைத்திந்தியப் பணி'' என்னும் சொற்றொடர், இந்திய ஆட்சிப் பணி என்று வழங்கப்படும் பணி அல்லது இந்தியக் காவல்பணி என்று வழங்கப்படும் பணி அல்லது பிரிவு 2அ-வில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிற பணி எதுவும் என்று பொருள்படும்.

பிற அனைத்திந்தியப் பணிகள்.

2அ. மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இதன்பொருட்டுக் குறித்திடும் தேதி முதல் செல்திறம் பெறுமாறு பின்வரும் அனைத்திந்தியப் பணிகள் அமைக்கப்படுதல் வேண்டும் ; வெவ்வேறு பணிகளுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்; அதாவது :—

1. இந்தியப் பொறியாளர்கள் பணி (பாசனம், மின்னாற்றல் கட்டடம் மற்றும் சாலைகள்) ;

2. இந்திய வனப் பணி ;

3. இந்திய மருத்துவ மற்றும் நல்வாழ்வுப் பணி.

ஆளெடுப்பதையும் பணிவரைக்கட்டுகளையும் முறைப்படுத்துதல்.

3. (1) மைய அரசாங்கம், ஜம்மு-காஷ்மீர் மாநிலம் உள்ளடங்கலாகத் தொடர்புடைய மாநிலங்களின் அரசாங்கங்களுடன் கலந்தாய்வு செய்த பின்பு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக அனைத்திந்தியப் பணிக்கு ஆளெடுப்பதையும், அதற்கு அமர்த்தப்பெறுபவர்களின் பணிவரைக் கட்டுகளையும் முறைப்படுத்துவதற்கான விதிகளை வகுக்கலாம்.

(1அ) விதிகள் வகுப்பதற்கு இந்தப் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரம், அந்த விதிகளுக்கு அல்லது அவற்றில் எதற்கும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முந்தையதாக இல்லாத ஒரு தேதியிலிருந்து முன்மேவு செல்திறம் பெறுவதற்கான அதிகாரத்தை உள்ளடக்கும் ; ஆனால், எவருக்கு அந்த விதி பொருந்துறத்தக்கதோ அவருடைய நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பாதிக்கின்ற விதி எதற்கும் முன்மேவு செல்திறம் அளிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி மைய அரசாங்கத்தால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அத்தகைய விதி எதன்படியும் அல்லது அதனை அடியொற்றி வகுக்கப்படும் ஒழுங்குமுறைவிதி ஒவ்வொன்றும், அத்தகைய விதி அல்லது ஒழுங்குமுறை விதி வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது கூட்டத்தொடரில் இருக்கையில் ஒரு கூட்டத்தொடரிலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களிலோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு கால அளவுக்கு அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய விதியில் அல்லது ஒழுங்குமுறை விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது ஒழுங்குமுறைவிதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை

இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அல்லது ஒழுங்குமுறைவிதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அல்லது ஒழுங்குமுறைவிதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

*நிலவுறு விதிகள் தொடர்ந்து இருந்துவருதல்.*

4. இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டிமுன்பு, செல்திறமுடையனவாகவும் அனைத்திந்தியப் பணிக்குப் பொருந்துறத்தக்கனவாகவும் இருந்த விதிகள் அனைத்தும் தொடர்ந்து செல்திறமுடையன ஆகும். அவை இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளாகக் கொள்ளப்படும்.